
கிருஷ்ணா பிக்சர்ஸ்
மாங்கல்ய பாக்கியம்
டைரக்ஷன்
T.R.ரகுநாத்
G.H.RAO

### கிருஷ்ணா பிக்சர்ஸ்

# மாங்கல்ய பாக்கியம்

**நடிகர்கள்**

| | | |
|---|---|---|
| பாலாஜி | ... | சந்திரன் |
| K. A. தங்கவேலு | ... | மந்திரவாதி சிஷ்யன் |
| T. S. பாலையா | ... | இன்ஸ்பெக்டர் |
| O. A. K. தேவர் | ... | மந்திரவாதி |
| T. K. ராமசந்திரன் | ... | பரமானந்தம் |
| R. பாலசுப்பிரமணியம் | ... | வேதாசலம் |
| பக்கிரிசாமி | ... | வேணு |
| கரிக்கோல்ராஜ் | ... | ரங்கன் |
| கணபதி | ... | குடியானவன் |
| ராமராவ் | ... | பஞ்சாயத்து தலைவர் |
| K. A. நாராயணன் | ... | போலீஸ் |
| நடராஜன் | ... | நாரதர் |

மற்றும்

லூஸ் ஆறுமுகம், முத்துப்பிள்ளை, கோலப்பன்

முதலானோர்

**நடிகைகள்**

| | | |
|---|---|---|
| ராகினி | ... | கௌரி |
| குசலகுமாரி | ... | சுமதி |
| M. சரோஜா | ... | மருதாயி |
| M. லக்ஷ்மிபிரபா | ... | காமாட்க்ஷி |
| C. K. சரஸ்வதி | ... | செல்லாயி |
| மோகனா | ... | ரங்கன் தங்கை |
| பத்மினி | ... | குறத்தி |
| சாயி, சுப்புலக்ஷ்மி | ... | பரதநாட்டியம் |
| மாதங்கி | ... | மாயப் பெண் |
| M. N. ராஜம் | ... | சரஸ்வதி |
| G. சகுந்தலா | ... | அநுசூயா |
| தனம் | ... | லக்ஷ்மி |
| சுசீலா | ... | பார்வதி |

மற்றும்

ஜோதி—ராஜேஸ்வரி, சரோஜினி, பாலா,
கமலா—சந்திரா, பேபி

| | | |
|---|---|---|
| கதை வசனம் | ... | அய்யாப்பிள்ளை |
| உதவி | ... | மக்களன்பன் |
| பாடல்கள் | ... | உடுமலை நாராயணகவி, தஞ்சை ராமையாதாஸ், கவிஞர் கண்ணதாசன் |
| பின்னணிக் குரல் | ... | சீர்காழி கோவிந்தராஜன், S. C. கிருஷ்ணன், M. L. வசந்தகுமாரி, P. லீலா, A. P. கோமளா, ரத்னமாலா, ஜமுனாராணி, சுசீலா |
| சங்கீத டைரக்ஷன் | ... | G. ராமனாதன் |
| நடன அமைப்பு | ... | P. S. கோபாலகிருஷ்ணன் சம்பத்குமார், சின்னிலால் |
| உடை அலங்காரம் | ... | M. G. நாயுடு, சீனிவாசன், ஜம்கி கிருஷ்ணமூர்த்தி |
| உதவி | ... | M. D. ராஜன், M. கிருஷ்ணன் |
| ஆர்ட் டைரக்ஷன் | ... | P. அங்கமுத்து |
| உதவி | ... | ராதா |
| ஒளிப்பதிவு டைரக்ஷன் | ... | M. A. ரஹ்மான், R. சம்பத் |
| ஒலிப்பதிவு | ... | A. V. பார்த்தசாரதி |
| பாடல்கள் | ... | ராஜகோபால், கண்ணன் (ரேவதி) |
| சண்டை அமைப்பு | ... | R. N. நம்பியார் |
| மேக்கப் | ... | நவநீதம், தனக்கோடி |
| உதவி | ... | R. வேணுகோபால் |
| எடிட்டிங் | ... | V. B. நடராஜன் |
| உதவி | ... | K. S. மணி, ராஜு |
| புரொஜக்ஷன் | ... | நாராயணன் |
| படப்பிடிப்பு நிர்வாகம் | ... | T. K. கோவிந்தன் |
| உதவி டைரக்ஷன் | ... | D. R. துரைராஜ் |

*ஸ்டூடியோ :*

**விஜயா & வாஹினி**

(லெலஸீஸ் விஜயா புரொடக்ஷன்ஸ்)

*டைரக்ஷன் :*

# T. R. ரகுநாத்

# மாங்கல்ய பாக்கியம்

## (கதைச் சுருக்கம்)

பாட்டாளிப்பட்டி உழைப்பால் உயர்ந்தவர்கள் வாழும் ஓர் கிராமம்; அந்த ஊர் சேரியில் பிறந்தவள் கௌரி. தெய்வ பக்தி உள்ளவள். ஒரு நாள் அவள் காட்டில் நாவற்பழம் பொறுக்கும் போது, மந்திர சக்தி பூஜைக்காக பெண் தேடும் மந்திரவாதி ஒருவன் அவளைத் தூக்கிச் செல்ல முயற்சிக்கிறான். அது சமயம் தற்செயலாக அங்கு வந்த சந்திரன் அவளைக் காப்பாற்றுகிறான். இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. ஆனால், சந்திரன் தங்கை சுமதி பரமானந்தம் என்பவனால் கடத்திச் செல்லப்பட்டிருந்ததால், அவளைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுவிடுகிறான். இதற்கு கௌரி தன் தோழி மூலம் உதவி செய்கிறாள். சந்திரன் நண்பன் வேணுவும் அவனுக்காகப் பாடுபடுகிறான். ஆனால், சுமதியை பரமானந்தத்தினிடமிருந்து மந்திரவாதி கடத்திக்கொண்டு போய் விடுகிறான். எனவே சுமதியைக் காணாமல் சந்திரனும் அவன் பெற்றோர்களும் மிகவும் வேதனையடைகின்றனர்.

இது இவ்வாறிருக்க கௌரி சந்திரனையே நினைந்து ஏங்குகிறாள். அவள் வாட்டத்திற்குக் காரணம் சந்திரனே என்றறிந்த அவள் தாய், சந்திரனுக்கு வருகிற சந்திர கிரஹணத்தன்று கண்டமிருப்பதைக் கூறி, கௌரியை எச்சரிக்கிறாள். ஆனால் கௌரி, சாவித்திரி, அனுசூயா போன்ற கற்புக்கரசிகள்போல் தானும் தன் மாங்கல்ய பாக்கியத்தின் பெருமையால் கணவனைக் காப்பாற்ற முடியும் என்று பிடிவாதம் செய்கிறாள். சந்திரன்—கௌரி திருமணம் நடைபெறுகிறது. ஆனால் சந்திரன் தங்கையின் எண்ணமாகவே பித்துப் பிடித்தவன்போலாகி விடுகிறான்.

இதற்கிடையில் கௌரியின் தோழி மருதாயிக்கும், மந்திர வாதியின் சிஷ்யனுக்கும் காதல் ஏற்படுகிறது. சிஷ்யன் மூலம் சுமதி மந்திரவாதி குகையில் இருக்கும் ரகசியத்தை அவள் அறிந்து வந்து சந்திரனிடம் கூறுகிறாள். உடனே சந்திரன் புறப்படுகிறான். ஆனால், அன்றுதான் சந்திரகிரஹணம் எனவே, அவனைப் போக விடாமல் தடுத்து வேணு புறப்படுகிறான். கௌரி தன் குல தெய்வத்தினிடம் ஓடிப்போய் வேண்டுகிறாள். ஆனால், சந்திரன் மந்திரவாதி குகைக்கு விரைந்து விடுகிறான்.

மந்திரவாதியிடம் சிக்கிய சுமதி என்ன ஆனாள்...?

அவளை மீட்கப் போன சந்திரன் கதி என்னவாயிற்று...?

சந்திரகிரஹணத்தன்று நேரவிருந்த ஆபத்திலிருந்து மீள முடிந்ததா...?

கௌரி கணவனைக் காப்பாற்றத் தன் மாங்கல்ய பாக்கியத்தின் மீது வைத்திருந்த பக்தி நிறைவேறியதா... ?

மந்திரவாதியின் சக்தி பலித்ததா...?

பதில் — திரை கூறும்.

# பாட்டு 1

இயற்றியவர் :
**தஞ்சை ராமையாதாஸ்**

பாடியவர்கள் :
**வசந்தகுமாரி**
**ரத்னமாலா, ஜமுனாராணி**

கௌரி :

*பாடுபட்டாலே மச்சான்*
*பலனுண்டு பாரு மச்சான்*
*பாலைவன சீமையெல்லாம்*
*சோலைவனமாகுமே*
*பாடுபட்டா* (பாடுபட்டாலே)

*ஏழையென்பவன் கிடையாது—இனி*
*ஏச்சி வாழவும் முடியாது*
*ஏற்ற தாழ்வுடன் தராசுமுள்ளு*
*இனிமே சாயவும் கூடாது*

*வாழப்பிறந்தவன் நான்தானென்று*
*வம்பு பேசினா நடக்காது*
*வானம் பொழியுது பூமி வெளையுது*
*மறந்திடாதே மச்சான்—மச்சான்*
*மறந்திடாதே மச்சான்* (பாடுபட்டாலே)

*உணவு உற்பத்தி அவசியம்தான்—அது*
*உழவில் இருக்குது ரகசியம்தான்*
*பணம் காசுடன் படாடோபமாய்*
*வாழ்வது இனிமேல் நெருக்கடிதான்*

*பாட்டாளியோடு முதலாளிகளும்*
*கூட்டாளியாக வேணுமுங்க—அப்ப*
*பஞ்ச பிசாசும் லஞ்ச பிடாரியும்*
*பறந்தே போயிடுங்க—மச்சான்* (பாடுபட்டாலே)

*அஞ்சு வருஷந்தா(ன்) பொறுத்துக்குங்க*
*அதுக்கப்புறம் நாட்டை நிறுத்துக்குங்க*
*குஞ்சு கொழந்தைக்கு கஞ்சிதண்ணியும்*
*குறையாது அதை பாத்துக்குங்க*

*வஞ்சமில்லாம வயலை நினைச்சா*
*மண்ணு பொன்னாகி மாறிடுங்க*
*கொஞ்சம் தயவு பண்ணி நல்லா கேளுங்க*
*குறையே தீந்திடுங்க—மச்சான்* (பாடுபட்டாலே)

## பாட்டு 2

இயற்றியவர் : —
**உடுமலை நாராயணகவி**

பாடியவர்கள் :
**சீர்காழி கோவிந்தராஜன்**
**ரத்னமாலா, ஜமுனாராணி**

சந்திரன் : *ஒன்றே மாந்தர்குலம் ஒருவனே கடவுள்*
*என்றே தேறுவது அறிவாகும்*

சீனு : *அது*
*நன்றே யாகுமென உணர்ந்திடாரை மக்கள்*
*என்றே கூறுவது தவறாகும்*

சந்திரன் : *பெண்ணும் ஆணுமென பிறந்த ஜாதியது*
*மண்மேல் ரெண்டுதான் வேறில்லை*

அஞ்சலி : *இதில்*
*பேதம் நாட்டி மனப்பகைமை காட்டி நாம்*
*பிரிந்து வாழ்வதில் பயனில்லை*

சந்திரன் : *சிலைகள் செய்துமே கடவுள் நாமம் தந்து*
*புலவர் பாடினதும் எதனாலே*

அருணாசலம் : *புத்தி*
*தெளிவில்லாரும் நல்ல வழியிலே மனதைச்*
*செலுத்த வேண்டுமென்ற முறையாலே*

சந்திரன் : *அழிந்திடாது என்றும் குறைந்திடாது மனம்*
*மறந்திடாது நிற்கும் பொருள் யாது...?*

சிவானந்தம் : *உடல்*
*அழிந்தபோதும் புகழ் மறைந்திடாது நிற்கும்*
*அறிவை யூட்டும் கல்வி புவிமீது*

சந்திரன் : *எது...?*

எல்லோரும் : *பகுத்தறிவை யூட்டும் கல்வி புவிமீது*

சந்திரன் : *அடக்கவேண்டியது யாரை...?*

பொன்னப்பன் : *துஷ்டனை*

சந்திரன் : *சாரதாமணி மனிதன் அடக்கவேண்டியதுயாரை?*

சாரதாமணி : *தன்னைத்தானே*

சந்திரன் : *கடைப்பிடிக்கவேண்டியது என்ன?*

கோவிந்தன் : *காக்கா சார்*

சந்திரன் : *ரவீந்திரா...கடைப்பிடிக்கவேண்டியது என்ன?*

ரவீந்திரன் : *நல்ல ஒழுக்கம்*

சந்திரன் : படிக்கவேண்டியது என்ன ? பத்மனுபா படிக்கவேண்டியது என்ன ?

பத்மனுபன் : நாவல் சார்

சந்திரன் : இப்ரகீம்

இப்ரகீம் : பத்திரிகை சார்

சந்திரன் : ரவீந்திரா படிக்கவேண்டியது என்ன ?

ரவீந்திரன் : திருக்குறள் சார்...

சந்திரன் : பலே...பலே... (ஒன்றே மாந்தர்)

## பாட்டு 3

இயற்றியவர் : **தஞ்சை ராமையாதாஸ்**

பாடியவர்கள் : **சீர்காழி கோவிந்தராஜன், சுசீலா**

சந்திரன் :
கண்ணோடு கண் கலந்தால்
காதலின் முதல் பாடம்
கனி இதழும ஆவலினல்
கவிதை கூட பாடும்

கெளரி :
விண்மேவும் சந்திரனுடன்
தாரையும் விளையாடும்
விலைமதியா ஜோதியிலே
கலந்து அன்பை நாடும்
காணுத இன்பக்கலை காவியமும் நீயே - உன்
கற்பனையில் உருவான ஓவியமும் நானே

சந்திரன் :
தேனேடும் பொய்கையிலே
ஜீவமலர் நீயே
தினமும் உன்னை மறவாத
தென்றல் அலை நானே (கண்ணோடு)

(தொகையரு)

கெளரி :
வண்ணத்தமிழ் மாதா மடியிலே
வளர்ந்த கலைச் செல்வமே
வாழ்விலே மங்காத சுடர்தீபமே
என் கண்கண்ட தெய்வமே

சந்திரன் :
அழகோடு அசைந்தாடும் பூங்கொடியே
அன்பே என் ஆருயிர் பைங்கிளியே
அழியாத எழில்மேவும் அமுத கலையே
என் அமுத கலையே

(பாட்டு)

கௌரி : மாருத சதிபதியாய்
மகிழவேண்டும் கண்ணே
மாலையிட்ட மனம்போலே
வாழ்ந்திடுவோம் மன்னே

சந்திரன் : வாழ்நாளில் உன்னை என்றும்
நான் மறவேன் பெண்ணே
வனிதா உன் நிழலாக
இருந்திடுவேன் கண்ணே (கண்ணோடு)

## பாட்டு 4

இயற்றியவர் :
உடுமலை நாராயணகவி

பாடியவர்கள் :
சீர்காழி கோவிந்தராஜன்
வசந்தகுமாரி, ஜமுனாராணி
ஏ. பி. கோமளா, ரத்னமாலா

சதி அநுசூயா

சரஸ்வதி : அக்காமார்களே
பெண்களுக்கெல்லாம் பெரியவள் நானே
சரஸ்வதி நான் (பெண்)

அண்டசராசரம் யாவும் படைக்கும்
அயனார் திருத்தேவியும் நான் (பெண்)

அழியாப்புகழ் நாட்டும் அறிவை
யூட்டும் ஞானக்கலைதான் - என்
அருளால் பெறலாம் அதனால்
அகத்தில் நீங்கும் இருள்தான்
சிலர் வாழப் பலரை வாட்டும்
செல்வங் கொடுக்கும் உனக்கும் உடல்
சிதைந்த பின்பு மறையும் சக்தி
தேவியுனக்கும் உயர்ந்தவள் நான் (பெண்)

லட்சுமி : சகோதரிகளே
பொருளைக் கொடுத்து மூடர்தம்மை
பெரிய மனிதராக்குவேன்
புலவர் தம்மை விலைக்கு வாங்கிப்
புகழ்ந்து பாடச் செய்குவேன்

சரஸ்வதியுன் தாசர் தம்மைத்
தரித்திரராய் வாட்டுவேன் - இந்தச்
சக்தியம்மாளின் பக்தரும் என்னைப்
பணிந்திடப் பொன்னை நீட்டுவேன்
பெண்களுக்கெல்லாம் சிறந்தவள் நானே
மகாலட்சுமி நானே (பெண்)

பார்வதி : தங்கைமார்களே
அளவில்லாத செல்வம் உனது
அன்பைக்கொண்டு தேடலாம்
ஆயுங்கலைகள் யாவும் இவளின்
அருளினாலே கூடலாம்
அன்பும் அருளும் தங்கவுடம்பு
அவசியந்தானல்லவா? அந்த
அவசியத்திலே ரகசியமாய்
அமைந்த சக்தியும் நானல்லவா?
பெண்களுக்கெல்லாம் சிறந்தவள் நானே
பார்வதி நானே (பெண்)

நாரதர் : அரிஹரி முகுந்தா பரந்தாமா இவர்கள்
அறியாமல் சண்டையிடலாமா
தரணியில் அநுசூயா என்றிடும் பெண்ணாள்
தன்மையை அறிந்தால் அடங்குவீர் தன்னால் (அரிஹரி)

மூவரும் : அப்படியானவளை அவமானஞ் செய்வதற்கு
இப்பவே புறப்படுவோம் வாங்கடி - நம்மைக்
கைப்பிடித்த நாயகரைக் கட்டாயமாயனுப்பிக்
கண்ணியத்தைக்·காக்கவேணும் வாங்கடி -
உம் வாங்கடி

* * *

சரஸ்வதி : தேவருக்குள்ளே சிறந்த மூவருக்கும் நாங்களினி
தேவியர் என்றால் வெட்கம் கேட்டால்
சிரிக்காதோ அக்கம் பக்கம்

லட்சுமி : பூவுலகிலே யொருத்தி புண்யவதியாம் - எங்கள்
மூவருக்கும் மேலான புகழ் நிதியாம்

சரஸ்வதி : பாவையவள் பேரது அநுசூயா இந்தக்
கேவலத்தை நீக்கிவிட நீங்க செல்லவேணுமையா

மூவரும் : தேவருக்குள்ளே சிறந்த மூவர்களே

* * *

தேவர்கள்: தவசி பிட்சாந்தேகி - அம்மணி
தவசி பிட்சாந்தேகி

புவிமேலே இச்சா பிச்சைதான் பெறுவோம்
பூவை நீ மறுத்தால் யாம் போய் வருவோம் (தவசி)

அநுசூயா : மஞ்சள் கயிற்றின் மாங்கல்யமே - யென்
மானங் காத்திடுவாய் - என்
மனநிலை யுலகம் அறியவும் உந்தன்
மகிமையைக் காட்டிடுவாய் - திரு (மஞ்சள்)

பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை ஆனால் என்
வார்த்தையும் பலித்திடவே தவ
பக்தர்களாய் வந்த தேவர்கள மூவரும்
குழந்தைகள் ஆகிடவே - திரு (மஞ்சள்)

சக்தி திருவாணி கொண்ட
முத்தொழில் மும்மூர்த்திகளும்
புத்திரராய் வாய்ப்பதற்கே - கிளியே
புண்யமென்ன செய்தேனடி

ஆழ்ந்த தவந்தான் புரியும்
அருள முனிவர் காணுதலை
ஏழை நான் காண்பதற்கே - கிளியே
என்ன தவம் செய்தேனடி

பாடுபடும் ஏழையெந்தன்
பர்த்தாவே தெய்வமென்று
பக்தி செய்த பலனதுதான் - கிளியே
பாலர்களாய் அடைந்தேனடி

* * *

தேவிகள் : மாங்கல்ய பிச்சையம்மா எங்களுக்கருள் - இனித்
தாங்கமுடியாது எங்கள் கர்வமுந் தணிந்ததம்மா
(மாங்கல்ய)

கற்பினிற் சிறந்தவளும் கண்ணியம் மிகுந்தவளும்
காசினி மீதினில் நீயே - எங்கள்
தப்பிதம் உணர்ந்துகொண்டோம்
தற்புகழ்ச்சியும் மறந்தோம்
தாள பணிந்தோம் காப்பாற்றும் தாயே - திரு
(மாங்கல்ய)

கணவனே வாழ்வில் என்றும்
கண்கண்ட தெய்வம் என்று காலமெல்லாம்
பணிந்தாய் நீயே
கள்ளமில்லா உள்ளங்கொண்ட
காரிகையே உன்னால் இன்றே இல்லறத்தின்
உண்மை கண்டோம் - தாயே (மாங்)

## பாட்டு 5

இயற்றியவர் :
**தஞ்சை ராமையாதாஸ்**

பாடியவர்கள் :
**ஜமுனாராணி – ரத்னமாலா**

குறத்தி: இமயமலையை இடது கையால்
ஏந்தி காட்டும் ஜாதி
இணையில்லாத குறத்திக்கெல்லாம்
துணைபுரிவாள் ஆதி

அமைதியாக வாக்குனாலே
சொல்லப் போற சேதி
அத்தனையும் பலிச்சவுடன்
தீரும் மனோவியாதி

வையகம் போற்றிடும் மதுரைவீரா - நீ
வந்தென்னை ஆண்டருள் மதுரைவீரா
வாக்குமேலே நின்னு மதுரைவீரா - நீ
வந்து குறி சொல்லு மதுரைவீரா

அடி அம்மாளு சும்மா நீ கேளு - நீ
அஞ்சாதே உனக்கேற்ற ஆளு - நாளை
அன்போடு வரப்போறான் பாரு
அவன் இல்லாமல் நடக்காது வேறு

அன்னாளிலே உன்னைத்தானே - பெரும்
ஆபத்தில் காப்பாற்றினானே - அதை
என்னாளும் நீ எண்ணி வீணே
இன்னும் தூங்காமலே மனம் தாங்காமலே
தினம் ஏங்காமல் ஏங்குறே மானே (அடி அம்மாளு)

ஒரு பெண்ணாலே அன்னம் கூட
உண்ணாமல் வாடுறான் - அவன்
பித்தன் போல சுத்திக்கிட்டு
எங்கெங்கையோ தேடுறான்

அதை என்னுன்னு கேக்காதே
எப்படியும் நாடுவான்
இஷ்டம் போல தேடிவந்து
மாலையைத்தான் போடுவான்

கண்ணாலம் ஆனாலுந்தானே - கண்டம்
கட்டாயம் தப்பாது மானே - அதை
பொன்னான மாங்கல்யம் தானே
கற்பு மாறாமலே கஷ்டம் பாராமலே - நின்னு
போராடி காப்பாற்றும் மானே (அடி அம்மாளு)

## பாட்டு 6

இயற்றியவர் :
**தஞ்சை ராமையாதாஸ்**

பாடியவர்கள் :
**கிருஷ்ணன், லீலா**

வேணு: கண்ணே செல்லத்தாரா—தேன்
கனியே இன்பத்தாரா
கானம் பாடும் வானம்பாடி
ஜோடி யாகிறோம்

சுமதி: கண்ணா ஆசை ராஜா—நான்
காதல் இன்ப ரோஜா
கானம் பாடும் வானம்பாடி
ஜோடியாகிறோம்
பாடும் கோகிலம்நானே—அதை
நாடும் ரசிகனும் நீயே

வேணு: தேடிவந்த யோகமே வாழ்வில்
இன்பமாக மாறுமே

சுமதி: வாடி இருந்த உள்ளமே என்றும்
அன்பினாலே சேருமே
ஆருயிர் நீதானே

வேணு: அன்பே வாராய்

சுமதி: இன்பந் தாராய்

வேணு: என் ஆசை (கண்ணே)

சுமதி: காத்தே இருந்தோம் பலநாள்—இன்று
கனவும் பலித்த திருநாள்

வேணு: காட்டில் காயும் நிலவாய் இனிமேல்
காலம் வீணில் போகுமா

சுமதி: காலம் நேரம் சேர்ந்தேவிட்டால்
கனிந்த ஜோடி மாறுமா
ஆவியும் நீதானே
வேணு: சந்தேகம் ஏன்?
சுமதி: உன் தேகம் நான்
வேணு: என் ஆசை—கண்ணே ஆசைதாரா
சுமதி: நான்காதல் இன்ப ரோஜா
இருவரும்: கானம்பாடும் வானம்பாடி ஜோடியாகிறோம்

## பாட்டு 7

இயற்றியவர்: **கவிஞர் கண்ணதாசன்**
பாடியவர்கள்: **வசந்தகுமாரி, லீலா**

இருவரும்: நெஞ்சத்திலே அச்சம் இல்லாதவர்
நிதமும் சுகம் பெறுவார்
நாளெல்லாம் பெருமைதேடுவார்—தினம்
உண்மை பேச அஞ்சுகின்ற மன்னவர் (நெஞ்)
கோலதயர் உறவாடும் கோமகளே—பழைய
குணத்தோடு மானிடப் பிறப்பெனவே பிறந்து (நெஞ்)
சுப்பு: ஜோடியோடு இவர் போகும்—வெகு
சோகங்காண மனம் வேகும்
சாயி: நாளில் நூறுமுறை குதிரைமீதிலே
ஏறுவார் சளைக்கமாட்டார்
சுப்பு: ஆடுவார் பாடுவார் அடிபிடியில்
வாங்கினாலும் விடமாட்டார்
சாயி: ஊரெல்லாம் தேடுவார் மாதரை நாடுவார்
ஒரே உலகில் சதா உலவும் (நெஞ்)

## பாட்டு 8

இயற்றியவர்: **தஞ்சை ராமையாதாஸ்**
பாடியவர்கள்: **சீர்காழி கோவிந்தராஜன், லீலா**

மருதாயி: என்னாங்க உங்களைத்தாங்க
இங்கே கொஞ்சங் கேளுங்க
பின்னாலே மறந்து என்னைப்
பித்துப்பிடிக்க செய்யாதீங்க
என்னாளும் உங்களை நம்பி
இருக்கிற பெண் நானுங்க

சிஷ்யன் : கண்ணான கண்ணுக்குட்டி நான்
கண்டெடுத்த பொன்னுகுட்டி
என்னாளும் சந்தேகமாய்
எண்ணிடாதே தங்கக்கட்டி
உன்னாலே எதுவும் செய்ய
துணிஞ்சு விட்டான் சிங்கக்குட்டி

மருதாயி : இப்படித்தான் பேசுவாங்க
ஏமாத்திட்டுப் போவாங்க
அப்படி எல்லாம் நீங்க
நடக்கவும் கூடாதுங்க
தப்பிதமாய் எண்ணாதிங்க
தயவு செய்து யோசிங்க

சிஷ்யன் : ஏமாற்றும் பேர்வழிபோல் நீயும்
எண்ணலாகுமா ?
என்னையே புரிஞ்சுங்கூட
இப்படி நினைக்கலாகுமா
எப்பொழுதும் உன்னைவிட்டு
என்னால் இருக்க முடியுமா?

மருதாயி : முன்னாலே சொன்னதுபோல
முடிச்சுப்போட்டுக் காட்டிடுங்க
பொன்னாலே தாலி செய்து
பொருத்தமாக போட்டிடுங்க

சிஷ்யன் : சொன்னாலும் சொல்லாட்டாலும்
சொக்கத் தங்கம் பாத்துக்கோ
ஜோசியமும் பாத்து வந்தேன்
நல்ல நாளு போட்டுக்கோ

இருவரும் : சல்லாப சோலையிலே
ஜாலியாக வாழணும்
சந்ததியும் பேரு வாங்க
குவாங் குவாங் பொறக்கணும்

மருதாயி : அன்பே என்னை மறந்திடாதீர் - வேறு
அங்கே எங்கேயும் அலைந்திடாதீர்

சிஷ்யன் : கண்ணே உன்னை மறப்பேனோ நான் - உன்னை
காணாதுயிரோடிருப்பேனோ நான்

## பாட்டு 9

இயற்றியவர் :
**உடுமலை நாராயணகவி**

பாடியவர் :
**ஜமுனாராணி**

மாயப்பெண் : *மாயமாகிய ஜாலந்தனிலே*
*வந்த மாது நானே - உடனே*
*மாறும் எந்தன் உருவமாகுமே*

*ஆசையாலெனை யாரும் தொட்டால்*
*அருவமாகுந்தானே - ஆனால்*
*ஆடல்பாடல் எல்லாம் செய்குவேன்* (மாய)

*கண்மூடும் நேரம் மாங்காச்செடியும்*
*காயும் கனியாட உன்னாலே*
*காணும் நாழிகை மூணேமுக்கால்*
*ஆனால் மறையும் தன்னாலே*
*எண்ணிப்பாரு இதுவெல்லாம் பொய்யே*
*எதுக்கும் உதவாதே......* (மாய)

*பில்லி சூனியம் செய்வார் தமக்கு*
*பெண்சாதி பிள்ளையும் தக்காது*

*பித்தலாட்டமே ஆனது செப்படி*
*வித்தைகள் எல்லாம் வெறும் சூது*

*நல்ல காரியம் எதுவும் அதனால்*
*நடைபெற முடியாதே.* (மாய)

## பாட்டு 10

இயற்றியவர் :
**தஞ்சை ராமையாதாஸ்**

பாடியவர் :
**வசந்தகுமாரி**

(விருத்தம் – ராகமாலிகை)

கௌரி :

யானை : *திக்கற்ற ஏழைக்கு*
*தெய்வமே துணை என்ற*
*பொன்மொழியும் பொய்யாகுமா ?*
*திக்கெட்டும் போற்றிடும்*
*விக்கின விநாயகா*
*திருவருள் புரியவாராய்*

நாகம் : எந்நாளும் ஈஸ்வரன்
ஆபரண மாகவே
இலங்கிடும் நாகராஜா
ஏழை என் வாழ்விலே
இன்னல் தராமலே
நெருங்காமல் விரைந்தோடுவாய்

அக்கினி : தேவியே உன்னைப்போல்
நானும் ஓர் பெண்ணென்று
அறியாயோ கங்கை அம்மா
அக்கினி கடல் தாண்ட
ஜீவநதியாகவே
அமுதமழை பொழியவாராய்

கற்கதவு: அன்னையே பராசக்தி
ஆதி பரமேஸ்வரி
ஆதாரம் நீ யல்லவோ
மண்ணிலே பிறந்திடும்
பெண்களுக் கவசியம்
மாங்கல்ய பாக்கியமன்றோ
கண்ணீரைவிட்டுக் கதறுகின்றேன்
மனம் கரையாதோ கனிந்திடாதோ
கணவன் பிழைக்கவே கபாடம் திறக்கவே
கருணையே புரிவாய் அம்மா
அம்மா......அம்மா......அம்மா

## பாட்டு 11

இயற்றியவர் :
**தஞ்சை ராமைய்யா தாஸ்**

பாடியவர்கள் :
**வசந்தகுமாரி, ரத்னமாலா**
**ஜமுனாராணி**

எல்லோரும் : பாடுபட்டாலே மச்சான்
பலனுண்டு பாரு மச்சான்
பாலைவன சீமையெல்லாம்
சோலை வனமாகுமே
பாலைவன சீமையெல்லாம்
சோலை வனமாகுமே.

❊

சாந்தி பிரஸ், சென்னை-1


எமது அடுத்த வெளியீடு
கிருஷ்ணா பிக்சர்ஸ்
ராஜா
தேசிங்கு
டைரக்ஷன்: யோகானந்த்
G.H.RAO